2024 பிப்ரவரி 22]
மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 49, மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. செந்தில்குமார், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

49—

கூடுதல் வகுப்பறைகள்

***51555—திரு. மா. செந்தில்குமார்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கள்ளக்குறிச்சி தொகுதி, புக்கிரவாரி ஊராட்சி, அரசு உயர்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் வகுப்பறைகள் கட்ட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை வணங்கி, தங்களது அனுமதியோடு விடையளிக்க விரும்புகிறேன்.*

கள்ளக்குறிச்சி மாவட்டம், கள்ளக்குறிச்சி தொகுதி, புக்கிரவாரி ஊராட்சி, அரசு உயர்நிலைப் பள்ளியில் 211 மாணவ, மாணவிகள் பயின்று வருகின்றனர். 7 ஆசிரியர்கள் பணிபுரிகின்றனர். இப்பள்ளிக்கு 3 வகுப்பறைக் கட்டடங்கள், 2 ஆசிரியர்கள் அறை, ஒரு நூலகம், ஓர் அறிவியல் ஆய்வகம், ஒரு மாற்றுத் திறனாளிக் கழிப்பிடம் உட்பட 6 கழிவறைகள் ஆகியன தேவைப்படுகின்றன. இதற்கான கருத்துருக்கள் பெறப்பட்டு, வரும் கல்வியாண்டிலேயே NABARD *மூலம் நிதியொதுக்கீடு செய்யப்பட்டு, கட்டடங்கள் கட்டும் பணிகள் தொடங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. செந்தில்குமார் அவர்கள்.*

திரு. மா. செந்தில்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்*

அண்ணன் எடப்பாடியார் அவர்களையும், (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அருமை அண்ணன் அவர்களையும் வணங்குகிறேன். கள்ளக்குறிச்சி மாவட்டம், கள்ளக்குறிச்சி தொகுதிக்குட்பட்ட, கள்ளக்குறிச்சி ஒன்றியம், புக்கிரவாரி ஊராட்சியினுடைய உயர்நிலைப் பள்ளி, ஒரு பழமையான பள்ளியாகும். போக்குவரத்து வசதி குறைவான, மிகவும் நெருக்கடியான ஊர், அந்த ஊர். அப்பகுதியினர் நகரத்திற்கு வரவேண்டும் என்றால் கிட்டத்தட்ட 15 கிலோ மீட்டர் பயணித்து வரவேண்டும். ஆசிரியர்கள் அங்கு வந்து பணியாற்றுவதற்கு மிகவும் பயப்படுவார்கள். போக்குவரத்து வசதி இல்லாத அந்த ஊரில் சுமார் 5 ஆயிரம் மக்கள் வசிக்கிறார்கள். அந்த ஊரில் பெரும்பாலானவர்கள் கேரளா, மங்களூரு, பெங்களூரு போன்ற இடங்களுக்குப் பிழைப்பதற்காகச் செல்வார்கள். ஆனால், அங்குள்ள பள்ளிக்கு மாணவர்களை அனுப்புவது மிகவும் கடினமான விஷயம்; மிக சிரமமான விஷயம். அதற்கிடையில்தான் அங்கு மாணவர்கள் கல்வி பயில்கிறார்கள். பெண்கள்தான் அங்கு அதிகமாகப் படிக்கிறார்கள். கிட்டத்தட்ட 153 பெண் பிள்ளைகள் படிக்கிறார்கள். மாணவர்கள் குறைவாகத்தான் படிக்கிறார்கள். மேலும், அங்கு இப்போது இருக்கிற பள்ளிக் கட்டடம் மிகவும் பழமையான கட்டடம். ஆகையினால், மிகச் சிறப்பான புதிய கட்டடத்தை அந்த இடத்தில் கட்டிக் கொடுக்க வேண்டும். அதேபோல, அந்தப் பள்ளி, ஏரியை ஒட்டி இருக்கிற பள்ளி. மழைக் காலங்களில் பள்ளிக்கு அனுப்பும்போது ஆசிரியர்களும், parents–ம் ஒரு பய உணர்வோடு இருக்கும் வகையில்தான் அந்தப் பள்ளி அங்கு இயங்கிக் கொண்டிருக்கிறது. ஏனென்றால், விளையாடப் போகவேண்டும் என்று சொன்னால் பிள்ளைகள் அந்த ஏரிக்குத்தான் செல்வார்கள். அரசுப் புறம்போக்கு இடத்தில்தான் பள்ளி இருக்கிறது. CEO–க்கு இன்னும் எழுதிக் கொடுக்கவில்லை. இந்த மாதத்தில் எழுதிக் கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள்; அந்த இடம் இன்னும் ஒப்படைக்கப்படவில்லை. அதேபோல, அந்தப் பள்ளியில் நன்றாகப் படிக்கிற பிள்ளைகள் இருக்கிறார்கள். அங்குள்ள மாணவர்கள் நன்றாகப் படிக்கக்கூடிய மாணவர்கள்தான். ஆனால், பெற்றோர், தங்கள் குழந்தைகளை அந்தப் பள்ளிக்கு அனுப்புவதற்குத் தயங்குகிறார்கள். (மணியடிக்கப்பெற்றது) எனவே, சிறப்பான கட்டடங்களைக் கட்டித் தருவதோடு, பெற்றோருக்கும் ஆசிரியர்களுக்கும் உள்ள அச்ச உணர்வைப் போக்குகின்ற வகையில் அப்பள்ளிக்கு சுற்றுச் சுவர் அமைத்துத் தர வேண்டும். மேலும், அப்பள்ளியில் மாணாக்கர்களுக்குத் தேவையான கழிவறை

2024 பிப்ரவரி 22]

வசதி சரியாக இல்லை. அதையும் செய்து தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 11–20

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பள்ளிக்கூடம் மற்றும் அங்கிருக்கின்ற சூழ்நிலையைக் கருத்தில்கொண்டு, அந்த நிலவரத்தை மிக ஆக்கபூர்வமாக மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அத்தகைய சூழ்நிலையைக் கருதித்தான், நம்முடைய நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கிற முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியில், நம்முடைய இன்றைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள், அப்போது பள்ளிக் கல்வித் துறை அமைச்சராக இருந்தபோதுதான், அந்த நடுநிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்தப்பட்டது.*

அதுமட்டுமல்ல, நான் ஏற்கெனவே பதிலளித்தபோது சொன்னதுதான். நீங்கள் சொல்வது போன்று அங்கு கட்டடங்கள் தேவைப்படுகின்றன. அதை நான் இல்லையென்று சொல்லவில்லை. இந்தக் கல்வி ஆண்டிலேயே நபார்டு நிதியுதவி பெற்று மாண்புமிகு உறுப்பினர் கேட்டவற்றையெல்லாம் கண்டிப்பாக செய்து கொடுக்கிறோம். போக்குவரத்து வசதிகள் குறித்து சொன்னார்கள். அதையும் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கண்டிப்பாகக் கொண்டு செல்கிறோம்.

நம்முடைய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பேசும்போதுகூட, இந்த ஆட்சி அமைந்து கடந்துள்ள 33 மாதங்களை முன்னேற்ற மாதங்களாகவே தான் கருதுவதாகச் சொல்லியிருக்கிறார்கள். பள்ளிக் கல்வித் துறையை எடுத்துக்கொண்டால், சுமார் 7,500 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பேராசிரியர் அன்பழகன் பள்ளி மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது என்பது உங்களுக்கு ஏற்கெனவே தெரியும். திட்டக் காலமான 5 ஆண்டுகளில், இதுவரை அதாவது, 33 மாதங்களில் 3,061 வகுப்பறைகள் கட்டி முடிக்கப்பட்டு

பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்பட்டுள்ளன; 21 ஆய்வகங்கள் திறக்கப்பட்டுள்ளன; 700 மீட்டர் அளவிற்கு சுற்றுச் சுவர்கள் கட்டப்பட்டிருக்கின்றன. கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பாக ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும் வைத்த கோரிக்கைகளின் அடிப்படையில், அவற்றைக் கணக்கீடு செய்து, எந்தப் பள்ளிகளெல்லாம் சிதிலமடைந்திருந்தனவோ, அவையெல்லாம் இடிக்கப்பட்டிருக்கின்றன. எங்கெல்லாம் மரத்தடியில் அமர்ந்து மாணவர்கள் படித்துக் கொண்டிருந்தார்களோ அதற்கெல்லாம் முன்னுரிமை கொடுக்க வேண்டுமென்ற எண்ணத்தில் இவற்றையெல்லாம் first phase-ல் செய்து முடித்துள்ளோம்.

மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களும் தமது பதிலுரையின்போது, தொடக்கப் பள்ளி, நடுநிலைப் பள்ளிகளுக்கு எத்தனைக் கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன, எத்தனைக் கட்டடங்கள் தொடர்ந்து கட்டப்பட்டு வருகின்றன என்பதையெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். நான் ஏற்கெனவே சொன்னதுபோல, 3,061 வகுப்பறைகள் மட்டுமல்லாமல், தற்போது, 3,000 வகுப்பறைகள் கட்டப்பட்டு வருகின்றன; 105 ஆய்வகங்கள் கட்டப்பட்டு வருகின்றன; 2,100 மீட்டர் அளவிற்கு சுற்றுச்சுவர் எழுப்பப்பட்டு வருகின்றது; மாணவர்கள் விடுதிகள் 5, மாணவியர் விடுதிகள் 5 என தொடர்ந்து கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. அதுமட்டுமல்லாமல், பல்வேறு மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களும், தங்கள் தொகுதியிலுள்ள பள்ளிக்கூடங்களுக்கு என்னென்ன infrastructure தேவைப்படுகின்றன என்று கடந்த இரண்டு நாட்களாக மட்டுமல்லாமல், தொடர்ந்து வலியுறுத்திக்கொண்டுதான் இருக்கின்றார்கள். தற்போது முடித்துள்ள first phase-ல் அவை விடுபட்டிருந்தாலும்கூட, எவற்றிற்கெல்லாம் முன்னுரிமை வழங்கப்பட வேண்டுமோ, அவற்றிற்கெல்லாம் முன்னுரிமை வழங்கி, next phase-ல் அந்தப் பணிகள் கண்டிப்பாக எடுத்துக்கொள்ளப்பட்டு, கட்டித் தருகின்ற பணியில் முழுமையாக எங்களை ஈடுபடுத்திக்கொள்வோம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக இதுபோன்ற கோரிக்கைகளை வைத்திருக்கின்ற அனைத்து மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. செந்தில்குமார் அவர்கள்.

2024 பிப்ரவரி 22]

திரு. மா. செந்தில்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கள்ளக்குறிச்சி ஊராட்சி ஒன்றியம், பொற்படாகுறிச்சி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் 100 மாணவர்களுக்குமேல் பயின்று வருகிறார்கள். அந்தப் பள்ளி 2023 ஆம் ஆண்டு, செப்டம்பர் மாதத்தில் இடிக்கப்பட்டது. இடிக்கப்பட்டதோடு சரி, அந்தப் பள்ளிக்கு புதிய கட்டடம் கட்டுவதற்கான எந்தவொரு முயற்சியும் இதுவரை எடுக்கப்பட்டதாக எனக்குத் தெரியவில்லை. தற்போது அந்தப் பள்ளியின் மாணவர்கள் அங்குள்ள கிராம நிர்வாக அலுவலகக் கட்டடத்தில் அமர வைக்கப்பட்டு அவர்களுக்கு கல்வி கற்பிக்கப்பட்டு வருகிறது. எங்கள் தொகுதியில் இதுபோன்று சுமார் 300 பள்ளிகளுக்குமேல் இருக்கின்றன. கட்டடங்கள் மிகவும் பழுதடைந்த நிலையில் இருந்ததால், புதிய கட்டடங்கள் கட்டும்பொருட்டு, கடந்த உள்ளாட்சித் தேர்தல் முடிந்த பிறகு நிறைய பள்ளிக் கட்டடங்கள் இடிக்கப்பட்டன. ஆனால், பெரும்பாலான பள்ளிகளுக்குப் புதிய கட்டடங்கள் கட்டப்படவில்லை. நாங்கள் போகுமிடங்களில் மக்கள் இத்தகைய பிரச்சினைகளைச் சொல்கிறார்கள். "சுற்றுச் சுவர் இல்லை, பள்ளிக் கட்டடங்கள் இடிக்கப்பட்டன; ஆனால், புதிதாகக் கட்டப்படவில்லை. இதை நாங்கள் எங்கே கேட்பது? நாங்கள் CEO-விடம் கேட்கிறோம். தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நீங்கள் செய்து கொடுக்க முடியுமா?" என்று என்னிடம் கேட்கிறார்கள். முதல் வருடத்தில் 2 வகுப்பறை பள்ளிக் கட்டடங்களுக்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து 19 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. அடுத்த ஆண்டில், அதே engineer 24 இலட்சம் ரூபாய்க்கு மதிப்பீடு கொடுத்திருக்கிறார். தற்போது 2 வகுப்பறைகள் கட்டுவதற்கே 32 இலட்சம் ரூபாய் மதிப்பீடு கொடுக்கப்படுகிறது. எனவே, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியாக வழங்கப்படும் 3 கோடி ரூபாய் போதுமானதாக இல்லை. அதனை 5 கோடி ரூபாயாக உயர்த்திக் கொடுத்தால் ஆரோக்கியமாக இருக்கும்; நிதிகளைப் பள்ளிகளுக்கு வழங்குவதற்கு ஏதுவாக இருக்கும். பள்ளிகளில் மேற்கூரை இல்லை; கீழே தளங்கள் இல்லை; சுற்றுச் சுவர் இல்லை; போதிய கழிவறை வசதிகள் இல்லை. (மணியடிக்கப்பெற்றது) இந்த மாதிரியான பிரச்சினைகள் நிறைய பள்ளிகளில் உள்ளன. இவ்வாறு மாவட்டம் முழுவதுமுள்ள பிரச்சினைகள் அனைத்தையும் உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர முடியாது. நாங்கள் செல்லக்கூடிய இடங்களில், அங்குள்ள தேவைகளுக்கு எங்களால் முடிந்ததை செய்கிற அளவிற்காவது நிதி இருந்தால் நன்றாக இருக்கும். அதேபோன்று, எங்கள் மாவட்ட*

பொறுப்பு அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். கள்ளக்குறிச்சியில் இருக்கிற அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் கிட்டத்தட்ட 20 வகுப்பறைகள் விரைந்து கட்டி முடிக்கப்படாததால், இன்னும் அந்தப் பள்ளி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலேயே இயங்கிக் கொண்டிருக்கிறது. அங்கு 20 வகுப்பறைகளுக்கு மேலே மாணவர்கள் மரத்தடியிலிருந்து. . .

முற்பகல் 11–25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், கேள்வியைச் சீக்கிரம் முடியுங்கள்.

திரு. மா. செந்தில்குமார்: இது முக்கியமானது. 20 வகுப்பறைகளுக்கும் அதிகமாக மாணவர்கள் மரத்தடியிலிருந்து கல்வி பயில்கிறார்கள். மூன்றாவது முறையாக இதை நான் பதிவு செய்கிறேன். பள்ளிக் கட்டடத்தை விரைந்து கட்டி முடித்தால் பள்ளியில் இருக்கிற மாணவர்கள் அங்கு உட்கார்ந்து படிப்பார்கள். அதற்கான சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டு அமருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இரண்டு விஷயங்களைச் சொல்லியிருக்கிறார்கள். ஒன்று, Project-னுடைய estimate அதிகமாக இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அதை மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்வோம். அதேபோன்று, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியினை 5 கோடி ரூபாயாக ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். அதற்குரிய பதிலை நம்முடைய நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்தான் வழங்க வேண்டும். எது எப்படியிருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போன்று, மரத்தடியில் அமர்ந்து படிக்கின்ற மாணவர்களுக்கு immediate ஆக கட்டடங்கள் கட்டித் தருவதற்கு ஏற்கெனவே ஒவ்வொரு மாவட்டத்திலும்

2024 பிப்ரவரி 22]

இருக்கின்ற CEOs *மூலமாகவும், அந்தந்த* local public representatives *மூலமாகவும் கணக்கீட்டை எடுத்துக் கொண்டுதான் இருக்கிறோம். அதில் அதிகப்படியாக எதற்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் என்பதைக் கணக்கீடு செய்துதான் நிதி பகிர்ந்தளிக்கப்பட்டு வருகிறது. கண்டிப்பாக வரும் ஆண்டில் நீங்கள் சொல்வதுபோன்று, மரத்தடியில் உட்கார்ந்து கல்வி பயிலும் குழந்தைகளுக்கு அதிகப்படியான முன்னுரிமை வழங்கப்பட்டு, அங்கே கட்டடங்களைக் கட்டித் தருவதற்குக் கண்டிப்பாக முயற்சிகள் எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 50, மாண்புமிகு உறுப்பினர் திரு.* T.K. *அமுல் கந்தசாமி, மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

50—

மாணவியர் விடுதி

***61745—திரு. T.K. அமுல் கந்தசாமி:**

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் உள்ள ஆதி திராவிடர் நல மாணவியர் விடுதியைப் புதுப்பிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி என். கயல்விழி செல்வராஜ், ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியுடன் திருத்திய விடையை இந்த அவைக்குச் சமர்ப்பிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதியில் மொத்தம் 3 மாணவியர் விடுதிகள் இயங்கி வருகின்றன. வால்பாறை கல்லூரி மாணவியர் விடுதியில் 44 மாணவிகளும், வால்பாறை பள்ளி மாணவியர் விடுதியில் 57 மாணவிகளும் தங்கி கல்வி பயின்று வருகின்றனர். இந்த இரண்டு விடுதிக் கட்டடங்களுக்கும் மேற்கூரை பழுது பார்த்தல், வர்ணம் பூசுதல், pipeline *மற்றும் மின்சாரப்*